கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:**11.08.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட துணை ஆட்சியர்களுக்கான பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்கத்தின் மூலம் தமிழக அரசின் தேர்வாணையத்தினால் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 18 துணை ஆட்சியர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி ஆகஸ்ட் 04 முதல் 10–ம் தேதி வரை ஏழு நாட்களுக்கு நடைப்பெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர், இரா.தமிழ் வேந்தன், துணை ஆட்சியர்களுடன் கலந்துரையாடினார், அவர்களுக்கு வரும் காலங்களில் நிர்வாக அதிகாரியாகவும், கொள்கை முடிவு எடுப்பவராகவும் இருந்து, சமூகத்தில் பின்தங்கிய மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும், விவசாயத்தை மையமாகக் கொண்டதாகவும், அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்தை வழங்கும் வளர்ச்சியின் முதன்மைப் பகுதியாகவும் வைத்திருக்க வலியுறுத்தினார்.

விரிவாக்க கல்வி இயக்குநர், முனைவர் பி.பொ. முருகன் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களின் நலனுக்கான முன்முயற்சிகளை பற்றி எடுத்துரைத்தார்.

தேசிய நிறுவனங்களின் தரவரிசையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது என்றும், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்களான டிரோன் தொழில்நுட்பம், உயர் தகவல் தொழில்நுட்பம், கரிம வேளாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, சிறுதானிய இரகங்கள், வேளாண் பொருட்களை மதிப்புக்கூட்டுதல் போன்ற தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

பயிற்சி பிரிவின் தலைவர் முனைவர் ந. ஆனந்தராஜா அவர்கள் இப்பயிற்சியின் நோக்கங்கள் பற்றி விளக்கினார். பயிற்சியின் நோக்கங்கள் குறித்து கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் பேராசிரியர் மற்றும் தலைவர் (பயிற்சிப் பிரிவு) முனைவர் என்.ஆனந்தராஜா விளக்கினார்.

இந்த ஒருவாரக்கால பயிற்சியின்போது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகள், வேளாண்மை பொறியியல், வேளாண்மை பொருட்களை மதிப்புக்கூட்டல், விதை உற்பத்தி மற்றும் விநியோக முறை, வேளாண் காலநிலை, தோட்டக்கலையில் உயர் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உற்பத்தி தொழில்நுட்பம், மண் மேலாண்மை வேளாண் வணிகம், பயிர் ஊக்கிகள், கணினிவழி நிகர் தொழில்நுட்பம், பயிர் உயிரியல் தொழில்நுட்பம், அங்கக வேளாண்மை, தொலைதூர கல்வி மற்றும் கல்வி ஊடக மைய செயல்பாடுகள் போன்ற தலைப்புகளில் விளக்கவுரையும், காட்சியுரையும் ஏற்பாடு செய்யப்பட்டது.

துணை ஆட்சியர்களின் சார்பாக செல்வி. கேந்திரா அவர்கள் பயிற்சியில் அவர்களின் எதிர்பார்க்கும் அம்சங்கள் பற்றி கூறினார். துணை ஆட்சியர்கள், இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும், புதிய இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக கொண்டு செல்ல முடியும் என்றும் கூறினார்.

இப்புதிய துணை ஆட்சியர்கள் சேலம், ஈரோடு, மதுரை, கன்னியாகுமாரி, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விழுப்புரம், திருவண்ணாமலை, விருதுநகர், தர்மபுரி. திருச்சி, நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முனைவர். சி. சிந்தியா பெர்னாண்டஸ், இணைப் பேராசிரியை அவர்கள் இந்தப் பயிற்சியை ஒருங்கிணைத்து நன்றியுரையாற்றினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***